# Verified RealEstate™

Your trusted partner for buying, selling, and managing property, ensuring hassle-free service with 100% transparency.

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996

**Official Property Record**

Digitally Verified Record - Powered by Verified RealEstate™



10

# நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்.1632/2017 தம3 நாள்: 15.02.2018

பொருள்: **அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி வட்டம் - கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் — மழவராயநல்லூர் ஊராட்சி மற்றும் கிராமம் - நிஅ.எண்கள்: 255/1pt, 256pt, 257/2Apt-ல் 182516.00ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து — உத்தரவிடப்படுகிறது.**

பார்வை:
1. மனுதாரர் திருமதி.M.துர்காதேவி, மற்றும் திரு.S.D.முருகேசன், அவர்களின் விண்ணப்பம் நாள்: 05.10.2017
2. அரசாணைஎண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
3. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13193/2017/LA1 நாள்: 03.11.2017

—

உத்தரவு:-

பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பான விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை (3)ல் கண்டுள்ள அரசாணையின் படியும், பார்வை (4)ல் கண்டுள்ள சுற்றறிக்கையின் படியும், உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூபாய்.500/-வீதம் அனைத்து மனைகளுக்கும் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளதனை தொடர்ந்தும், உத்தேச மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்தும்,மனைப்பிரிவு வரைபடத்திற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்: 63/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட இரண்டு வரைபட நகல்கள் இத்துடன் இணைத்து வட்டார வளர்ச்சி அலுவலர், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

அ) வரன்முறைக்கட்டணம்:

பார்வை (2)ல் கண்ட அரசாணை விதி எண். 9-ன் படி சதுர மீட்டருக்கு ரூ.30/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்ட, பின்னரே மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். (உதாரணமாக, 74.32ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 180—க்கான வரன்முறைக் கட்டணம் = 74.32 X 30 = ரூ.2230/-ஆகும்).

**Head Of Account:**

**0217 Urban Development**
**60 Other Urban Development Schemes**
**800 Other Receipts**
**AT Receipts under Regularistion Charges of Unapproved Layouts and Plots –DTCP**
**(DPC: 0217 60 800 AT 0007)**

ஆ) வளர்ச்சிக் கட்டணம்:

பார்வை (3)ல் கண்ட அரசாணை விதி எண்: 10-ன் படி சதுர மீட்டருக்கு ரூ. 25/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து, வசூல் செய்து தொகையினை உள்ளாட்சி தனியாக கணக்கு தொடங்கி, அக்கணக்கில் செலுத்தப்பட்டதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். (உதாரணமாக, 74.32ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 180-க்கான வளர்ச்சிக்கட்டணம் = **74.32 X 25 = ரூ.1858/-ஆகும்).**

இ).திறவெளி ஒதுக்கீடு:

பார்வை (3)ல் கண்ட அரசாணையின் படி விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு கீழ்க்கண்டவாறு பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு: **182516.00ச.அடி**

(ii) விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு: **149885.00ச.அடி**

(iii) விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு தேவையான பூங்கா பரப்பு: **14988.50ச.அடி (10.0%)**

(iv) ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய பூங்கா பரப்பு= **15797.67ச.அடி (10.53%)**

(v) மனைகள் விற்பனை செய்யப்பட்ட விபரம்:
மனை எண்கள்: **179, 180**

II.நிபந்தனைகள்:

1. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் நிலகையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும், வட்டார வளர்ச்சி அலுவலர், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம்அவர்களை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின் படி மனைப்பிரிவு சாலைகளை தானமாகப் பெற்று அல்லது நிலையில் உள்ள வழிகாட்டுதலின் படி மனைப்பிரிவு சாலைகளை தன்னிச்சையாக உள்ளாட்சி உரிமை மற்றும் பராமரிப்பிற்கு எடுத்துக்கொண்டதற்கான விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். மேலும், மனைப்பிரிவிற்கு அமையும் அணுகுசாலை பொதுசாலையாக உள்ளதா என்பதனை உள்ளாட்சி உறுதி செய்த பின்னரே வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. இந்த கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின், சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுக்கான நிலங்களை உள்ளாட்சி பெற்றுக்கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்துக் கொண்டதற்கான பத்திரம் மற்றும் ஆவணங்களை வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

4. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

5. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

6. விதி எண்:16-ன் படி உள்ளாட்சி தனியாக ஒரு கணக்கு தொடங்கி இந்த மனைப்பிரிவு வரன்முறைத்திட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும் வளர்ச்சிக் கட்டணங்களை அதில் செலுத்தி, பராமரித்து வர வேண்டும்.

7. அரசாணை விதி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எவையும் இந்த மனைப்பிரிவுக்குப் பொருந்தாது அல்லது கட்டுப்பாடுகளின் கீழ் வராது என்பதனை வட்டார வளர்ச்சி அலுவலர், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

8. வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் இவைகளை மனுதாரரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்த பின்னர் தனிமனைகளை உள்ளாட்சி வரன்முறை செய்து கொடுக்க வேண்டும். தனி மனைகளை வரன்முறைப்படுத்தப்பட்ட விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

9. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமூடக்கு மற்றும் பூங்கா பகுதிகள் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட சார்பதிவாளர், பதிவுத்துறை நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட திறவிடங்கள் உள்ளாட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

10. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்டவாறு சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமூடக்கு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை அவர்கள் உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்க்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

.4..

11. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதியினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, சார்பதிவாளர், பதிவுத்துறை, வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து பத்திரப்பதிவு மற்றும் உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவுஇடத்தின்பரப்பளவு | 182516.00ச.அடி | -- |
| ஒதுக்கிய மனைகள் | 111 | -- |
| பூங்கா | 15797.67 ச.அடி | 10.53% |

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொறுப்பு).,
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

பெறுநர்:

வட்டார வளர்ச்சி அலுவலர்,
கோட்டூர் ஊராட்சி ஒன்றியம்,
திருவாரூர் மாவட்டம். — இரண்டு வரைபட தொகுப்புகள்

நகல்:

1. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். — ஒருவரைபட தொகுப்பு

2. உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
திருவாரூர் மாவட்டம். — ஒருவரைபட தொகுப்பு

3. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
மன்னார்குடி வட்டம்,
திருவாரூர் மாவட்டம். — ஒருவரைபட தொகுப்பு

நகல்:

திருமதி.M.துர்காதேவி,
திரு.S.D.முருகேசன்,
No.11,A-2, நடராஜன் தெற்கு வீதி,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம் 614 001.

அலுவலக முகவரி:

நகர் ஊரமைப்பு துணைஇயக்குனர்
அலுவலகம்,தஞ்சாவூர் மண்டலம்
எண்.33,ராஜப்பா நகர் 4வது தெரு,
மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர் - 613 007.
மின்அஞ்சல்:-ddtjrregion@gmail.com

கோட்டூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை : திரு. ஏ.தமிழ்ச்செல்வன்

ந.க.எண்: 1097/2017/ஆ.2 நாள் : .05.2019

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல்- கோட்டூர் வட்டாரம் - மழவராயநல்லூர் ஊராட்சி – புல எண்கள்: 255/1Pt., 256pt., 257/2Apt. –ல் 182516 சதுரடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் வரப்பெற்றது – விற்பனை செய்யப்படாத மனைகள் வரன் முறைப்படுத்துதல் - இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை : 1. திருமதி. எம்.துர்காதேவி மற்றும் திரு. எஸ்.டி.முருகேசன் விண்ணப்பம் நாள்: 05.10.2017

2. அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 04.05.2017.

3. அரசாணை எண் 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்: 13.10.2017

4. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள் கடிதம் எண்: 1632/2017/தம3/ நாள் : 15.2.2018.

******

உத்தரவு :

பார்வை 4-ல் காணும் செயல்முறையின்வழி திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சி புல எண்கள்: **255/1 pt., 256 pt., 257/2A pt.** –ல் 182516 சதுரடி பரப்பளவில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம) எண் 63/2018 என கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் உத்தரவின் பேரில் இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலை, மூலைமுடுக்கு மற்றும் பூங்கா பகுதிகள் மனைப்பிரிவு உரிமையாளர்களால் மழவராயநல்லூர் ஊராட்சிக்கு தான பத்திரத்திரன் மூலம் மன்னார்குடி சார் பதிவக ஆவண எண் 2068/2018 -ன் படி பதிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், மேற்படி மனைபிரிவில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள 111 மனைகளில் விற்பனை செய்யப்பட்ட மனை எண் 179 மற்றும் 180 தவிர இதர விற்பனை செய்யப்படாத கீழ்காணும் 109 மனைகளுக்கு கூடுதல் 135344 சதுரடிக்கு 12586.99 சதுர மீட்டர்க்கு வரன்முறைக்கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் ரூ.3,77,610/- 17.05.2019-ந் தேதியில் அரசு தலைப்பிலும், வளர்ச்சிக்கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் ரூ.3,14,675/- 06.05.2019-ந் தேதியில் மழவராயநல்லூர் கிராம ஊராட்சியிலும் மனைப்பிரிவு உரிமையாளர்களால் செலுத்தி வைக்கப்பட்டுள்ளது.

| Sl. No. | Plot No. | Sq.ft. | Sq.mt. | Sl. No. | Plot No. | Sq.ft. | Sq.mt. | Sl. No. | Plot No. | Sq.ft. | Sq.m |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 159 | 1530 | 142.29 | 38 | 198 | 1000 | 93.00 | 74 | 234 | 800 | 74. |
| 2 | 160 | 1200 | 111.60 | 39 | 199 | 1000 | 93.00 | 75 | 235 | 800 | 74.4 |
| 3 | 161 | 1200 | 111.60 | 40 | 200 | 1000 | 93.00 | 76 | 236 | 800 | 74.40 |
| 4 | 162 | 1200 | 111.60 | 41 | 201 | 1200 | 111.60 | 77 | 237 | 800 | 74.40 |
| 5 | 163 | 1200 | 111.60 | 42 | 202 | 1200 | 111.60 | 78 | 238 | 800 | 74.40 |
| 6 | 164 | 1200 | 111.60 | 43 | 203 | 1200 | 111.60 | 79 | 239 | 800 | 74.40 |
| 7 | 165 | 1200 | 111.60 | 44 | 204 | 1200 | 111.60 | 80 | 240 | 800 | 74.40 |
| 8 | 166 | 1200 | 111.60 | 45 | 205 | 1200 | 111.60 | 81 | 241 | 800 | 74.40 |
| 9 | 167 | 1200 | 111.60 | 46 | 206 | 1200 | 111.60 | 82 | 242 | 800 | 74.40 |
| 10 | 168 | 1200 | 111.60 | 47 | 207 | 1200 | 111.60 | 83 | 243 | 800 | 74.40 |
| 11 | 169 | 1000 | 93.00 | 48 | 208 | 1200 | 111.60 | 84 | 244 | 800 | 74.40 |
| 12 | 170 | 1000 | 93.00 | 49 | 209 | 1200 | 111.60 | 85 | 245 | 1200 | 111.60 |
| 13 | 171 | 1000 | 93.00 | 50 | 210 | 1920 | 178.56 | 86 | 246 | 1200 | 111.60 |
| 14 | 172 | 1000 | 93.00 | 51 | 211 | 2000 | 186.00 | 87 | 247 | 1200 | 111.60 |
| 15 | 173 | 1200 | 111.60 | 52 | 212 | 1176 | 109.37 | 88 | 248 | 1680 | 156.24 |
| 16 | 174 | 1200 | 111.60 | 53 | 213 | 1178 | 109.55 | 89 | 249 | 1650 | 153.45 |
| 17 | 175 | 1200 | 111.60 | 54 | 214 | 1180 | 109.74 | 90 | 250 | 1200 | 111.60 |
| 18 | 176 | 1200 | 111.60 | 55 | 215 | 1183 | 110.02 | 91 | 251 | 1200 | 111.60 |
| 19 | 177 | 1200 | 111.60 | 56 | 216 | 1186 | 74.40 | 92 | 252 | 1200 | 111.60 |
| 20 | 178 | 1200 | 111.60 | 57 | 217 | 1189 | 74.40 | 93 | 253 | 1200 | 111.60 |
| 21 | 181 | 1200 | 111.60 | 58 | 218 | 1195 | 74.40 | 94 | 254 | 1200 | 111.60 |
| 22 | 182 | 1200 | 111.60 | 59 | 219 | 1200 | 74.40 | 95 | 255 | 1200 | 111.60 |
| 23 | 183 | 1200 | 111.60 | 60 | 220 | 1200 | 74.40 | 96 | 256 | 1200 | 111.60 |
| 24 | 184 | 1620 | 150.66 | 61 | 221 | 1200 | 74.40 | 97 | 257 | 1200 | 111.60 |
| 25 | 185 | 1770 | 164.61 | 62 | 222 | 1035 | 74.40 | 98 | 258 | 1200 | 111.60 |
| 26 | 186 | 1200 | 111.60 | 63 | 223 | 650 | 74.40 | 99 | 259 | 1200 | 111.60 |
| 27 | 187 | 1200 | 111.60 | 64 | 224 | 768 | 74.40 | 100 | 260 | 1200 | 111.60 |
| 28 | 188 | 1200 | 111.60 | 65 | 225 | 1200 | 74.40 | 101 | 261 | 990 | 92.07 |
| 29 | 189 | 1200 | 111.60 | 66 | 226 | 1200 | 74.40 | 102 | 262 | 2280 | 212.04 |
| 30 | 190 | 1200 | 111.60 | 67 | 227 | 1200 | 111.60 | 103 | 263 | 2424 | 225.43 |
| 31 | 191 | 1200 | 111.60 | 68 | 228 | 1200 | 111.60 | 104 | 264 | 2454 | 228.22 |
| 32 | 192 | 1200 | 111.60 | 69 | 229 | 1200 | 111.60 | 105 | 265 | 2460 | 228.78 |
| 33 | 193 | 1200 | 111.60 | 70 | 230 | 1200 | 156.24 | 106 | 266 | 2484 | 231.01 |
| 34 | 194 | 1200 | 111.60 | 71 | 231 | 1200 | 153.45 | 107 | 267 | 2464 | 229.15 |
| 35 | 195 | 1000 | 93.00 | 72 | 232 | 1200 | 111.60 | 108 | 268 | 2018 | 187.67 |
| 36 | 196 | 1000 | 93.00 | 73 | 233 | 800 | 111.60 | 109 | 269 | 2060 | 191.58 |
| 37 | 197 | 1000 | 93.00 | | | | | | | | |
| Grand TOTAL | | | | | | | | | | 135344 | 12,586.99 |

எனவே, மேற்காணும் விவரப்படி விற்பனை செய்யப்படாத மனைகளை வரன்முறைப்படுத்தி இறுதி ஒப்புதல் வழங்கி இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

14


இந்த உத்தரவு மூலம் இம்மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப் படுத்தப்பட்டதாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஏற்கனவே விற்பனை செய்யப்பட்ட மனைகளைப் பொறுத்து தனியே வரன்முறைக்கட்டணம் மற்றும் வளர்ச்சிக்கட்டணம் செலுத்தி வரன்முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
கோட்டூர்.

23/5/18

பெறுதல் : திருமதி. எம். துர்காதேவி, திரு. எஸ்.டி.முருகேசன்,
11ஏ-2, நடராஜன் பிள்ளை தெரு, மன்னார்குடி – 614 001.

நகல் : நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், தஞ்சாவூர்மண்டலம், தஞ்சாவூர்.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருவாரூர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, மாவட்ட ஆட்சியரகம், திருவாரூர்.
நகல்: சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி.
நகல்: வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், மன்னார்குடி
– வருவாய் ஆவணங்களில் மாற்றம் செய்திட.
நகல்: உதவிப் பொறியாளர் (ஊ.வ), கோட்டூர்
- மனைப்பிரிவு சாலைகள் சாலைப்பதிவேட்டில் பதிவு செய்திட.
நகல்: மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், மழவராயநல்லூர் ஊராட்சி
நகல்: ஊராட்சி செயலர், மழவராயநல்லூர் ஊராட்சி
– பூங்கா, சாலைகள் (ம) திறந்தவெளி இடங்கள் ஊராட்சி சொத்துக்கள் பதிவேட்டில் பதிவு செய்திட
நகல்: ஆ2 பிரிவு இருப்பு கோப்புக்கு



## our services doesn't just end there

### Buying & Selling Services

Property Buying Assistance, Property Selling Support, Market Price Analysis, Owner Outreach and Negotiation.

### Legal & Documentation Services

Certified EC, Patta, legal opinions, property verification, due diligence, litigation solutions, and legal heir certificates.

### Property Development & Approvals


Building plan approvals, construction, layout and sub-division approvals, zone conversion, and occupancy certification.

### NRI & Investment Services

Escrow Services, Rentals, Litigation Solutions, Property Valuation and Property Management

### Compliance & Special Services

Demolition, Vaasthu checks, regularization of unauthorized buildings, and office space solutions.



# empowering your real estate decisions with smart tools

## Property Valuation & Cost Estimation

Guideline Value, Apartment Composite Value, Stamp Duty & Registration Fees Calculator, Building Value Calculator, Capital Gains Calculator, Area Unit Converter, Length Unit Converter

## Ownership, Compliance & Legal Verification

Encumbrance Certificate (EC) Search, Find Your SRO, Temple Property Check, WAQF Property Check, View Patta/Chitta, View FMB, Patta Analyzer, EC Analyzer

## Zoning & Land Use Analysis

Land Use Zone Finder, CRZ Zone Check, Aquifer Zone Check, CBA Check, EWS Check, Road Width Check, Proposed Road Widening Check, FSI Calculator

## Property Documentation & Workflow Tools

Forms & Templates, Document Generator, Document Translation, Dictionary

## Vastu & Property Management Tools

Home Vastu Shastra, Plot Vastu Shastra, Property Management

Verified RealEstate™

We're honored to be part of your real estate journey

3/350/2 Mettukuppam,
OMR Thoraipakkam,
Chennai, India

hello@verified.realestate
+91 9996 12 9996
www.verified.realestate